சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதுப்பிப்பு பணிகள் மற்றும் நவீன முறையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பணிகளை நேற்று (20.06.2024) செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் -

இந்தியாவிலேயே முதல் இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது!

'தினத்தந்தி' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூன் 21-

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவிகிதம் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது என தினத்தந்தி நாளேடு 20.06.2024 அன்று தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவிகிதம் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது.

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்ற மகாகவி பாரதியாரின் பாடலுக்கேற்ப, தமிழ்நாடு எப்போதும் கல்வியில் சிறந்து விளங்கி வருகிறது. குறிப்பாக, உயர் கல்வியில் இந்தியாவில் முதலிடம் பிடித்து முத்திரை பதித்துள்ளது. கல்வி வளர்ச்சியில், தமிழ்நாட்டில் இதுவரை இருந்த முதல்அமைச்சர்கள் அனைவருமே அதிக முனைப்பு காட்டினார்கள். அந்த வரிசையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினும் ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்காக அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். கல்வித் துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் எல்லாம், "கல்விதான் உங்களிடமிருந்து யாராலும் திருடமுடியாத சொத்து" என்று அடிக்கடி சொல்லி வரும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், அதற்கேற்றாற்போல், பள்ளிக்கூட கல்வியிலும், உயர்கல்வியிலும் நிதிநெருக்கடி எத்தனை இருந்தாலும் பல்வேறு திட்டங்களையும், சலுகைகளையும் நிறைவேற்றி வருகிறார்.

தலையங்கம்

தினத்தந்தி

20.6.2024 (வியாழக்கிழமை)

உயர்கல்வியில் முத்திரை பதித்த தமிழ்நாடு!

அதிலும் உயர்கல்வியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் காலம், பொற்காலம் என்று சொல்லலாம். ஏனெனில் பள்ளிக்கூட படிப்பை முடித்து மாணவர்கள் இடைநிற்றல் இல்லாமல் உயர்கல்வியில் சேர வேண்டும், அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற சீரிய நோக்கில் புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றி உயர்கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை கொண்டு வந்துள்ளார். இதன் காரணமாக உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. அகில இந்திய உயர்கல்வி ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின்படி, உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவிகிதம் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது. இது அகில இந்திய சராசரியைவிட 2 மடங்கு அதிகமாகும்.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி ஆசிரியர் தினத்தன்று 6ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து இடைநிற்றல் இன்றி உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 'புதுமைப்பெண்' திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இந்தத் திட்டம் மாணவிகளுக்கு மாதம் ரூ1,000 வழங்க வகை செய்கிறது. தற்போது, இந்த திட்டத்தின் மூலம் 2 லட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் கலை கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள் மற்றும் உயர் படிப்புகளில் சேர்ந்து மாதம் ரூ1,000 பெற்று வருகிறார்கள். இந்த திட்டத்தின் மூலம் அரசு பள்ளிக் கூடங்களில் படித்து உயர்படிப்பில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனைத்தொடர்ந்து மாணவர்களுக்கும் மாதம் ரூ1,000 வழங்கும் 'தமிழ் புதல்வன்' திட்டமும் வரும் ஆகஸ்டு மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

அடுத்து, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சீரிய திட்டமாக 'நான் முதல்வன்' திட்டத்தை மாணவர்களுக்காக 2022ஆம் ஆண்டு மார்ச் 1ஆம்தேதி அவருடைய பிறந்த நாளன்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின் நோக்கம், ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களை கல்வியில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், தொழிலில், தனித்திறமையில் மட்டுமல்லாமல், நிறுவனங்களை நடத்தும் தொழில் முனைவோராக மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குவதாகும்.

இந்தத் திட்டத்தினால் இதுவரை 27 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். ஒரு லட்சத்து 19 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இது போல, மேலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதால் உயர்கல்வியில் தமிழ்நாடு முதல் இடம் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல், இந்தியாவுக்கே வழிகாட்டும் வகையில் அமைந்துள்ளது மிகவும் பெருமை அளிப்பதாக இருக்கிறது. உயர்கல்வித் துறை மேலும் உயரம் தொடட்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ச.தமிழ்செல்வன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் - இரா.லட்சுமணன் முன்னிலை !

42(அ) வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம்!

ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! ஆர்.டி.சேகர், கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, ஜூன் 21-

சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42 (அ) வட்டம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி தெரிவித்து பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (21.06.2024 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பழைய வண்ணை மேயர் பாசுதேவ் தெரு வீராகுட்டி தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர் ச. தமிழ்செல்வன் தலைமையில், வட்ட நிர்வாகிகள் கே.தேவதாஸ், ஜி.எம்.பிரபு, கே.சங்கர், த.குமரேசன், வி.எஸ். டி.பாலாஜி, வீ.செல்வமணி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், என்.மருதுகணேஷ், இர.பொன்இளவரசன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ப.ஆ.சண்முகம், மா.ரூபசங்கர், பி.கே.மூர்ததி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

நிகழ்ச்சியில் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், இரா.மதிவாணன், நேதாஜி யு.கணேசன், ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலகண்ணன், க.நாகம்மை, மு.கோபி, வி.தயாளன், வட்ட செயலாளர்கள் ப.குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், பொ.து.ராஜா, வீ.வடிவேல், எஸ்.எல்.சுந்தர், கே.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், இரா.பாலன், கி.ராஜேந்திரன், வெ.சு.சத்தியநாரயணன், சி.மணிகண்டன், ஏ.டி.மணி, எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, வை.கலைவாணன், ப.சோமசுந்தரமூர்த்தி, ஏ.ரமேஷ்பாபு, பி.சதிஷ்குமார், எஸ்.கே.இளங்கோ, த.தமிழ்கொடி, டி.வி.முத்துகிருஷ்ணன், கு.நற்குணம், நா.கஜேந்திரன், எஸ்.பி.எஸ்.புத்தன், எம்.எம்.சாமி, ஆர்.ரமேஷ், ஜெ.சுரேஷ்பாபு, வி.முத்து, கே.மோகன், சா.திருப்பதிசாமி, டி.ஆர்.தனிகாசலம், தேவி கதிரேசன், குமாரி நாகராஜ், வானூர்.கே.ராஜி, ஜே.ஜே.நெல்சன், பா.கோதண்டன், எஸ்.எம்.டிரவிசந்திரன், க்றிஸ்து ராஜ், ஃப்ராங்கிளின், இ.வீரன், இ.முத்துகிருஷ்ணன், கே.கோதண்டன், கோ.ஹரிராமன், எஸ்.ஜே.ராமு, ஜெ.வசந்தகுமார், ஆர்.ராஜா, எம்.கலைவாணி, கு.தமிழ்செல்வன், சீ.கார்த்திக், எம்.விஜயகுமார், தே.கண்ணன், ஒலி ஒளி ஆ.பாபு, வி.அருள், எம்.சாந்தகுமார், டி.வெங்கடேஸ்வரன், பி.நாகு, பா.நீலமேகம், மு.அ.ஷெரிப், எம்.கானமூர்த்தி, என்.திருநாவுக்கரசு, வி.எஸ்.கன்னியப்பன், த.எத்திராஜ், எஸ்.மூர்த்தி, பா.டேனியல், எஸ்.கே.அரிபாபு, பா.சேகர், பாகப் பொறுப்பாளர்கள் எஸ்.கிருஷ்ணமோகன், ஜி.நாகராஜ், எம்.கிஷோர் குமார், டி.சக்கரவர்த்தி, ஏ. மோத்திராஜ், ஜி.விஜயலட்சுமி, ஜெ.ஜெயந்தி, என்.ராஜேஷ், த. ஜானகிராமன், சி.கோபால கிருஷ்ணன், கே.வாசுதேவன், எம்.செல்வராஜ், ஐ.ஷோபனா, ஏ.பாண்டியராஜன், ஆர்.ராஜா, எல்.ராஜ்குமார், பு.சசிகுமார், இ.ஜெகதிஷ், எம்.கன்னியப்பன், டி.கமல்தாஸ், ஜி.காமராஜ், டி.வெற்றிசெல்வி, மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கே.மணி, எச்.வசந்தகுமாரி, ச.குமரன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர். நிகழ்ச்சி ஒருங்கினைப்பாளர்கள் தே.ஜனார்த்தணன், ஜெ.மகேஸ்வரி, எஸ்.அரிஸ்குமார்.

விக்கிரவாண்டி இடைத் தேர்தல்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவசரச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவசரச் செயற்குழுக் கூட்டம் வருகிற (23.6.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி அளவில் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம், எசாலம் ஊராட்சியில் பள்ளிக்கூடம் தெருவில் கலைஞர் திடலில் மாவட்டக் கழக அவைத்தலைவர் க.இனியரசு தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.வி.கோகுலக்கண்ணன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் ஆறுமுகம் மற்றும் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் வேம்பி ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய - பகுதி, பேரூர் செயலாளர்கள், மற்றும் மாநில மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : விக்கிரவாண்டி இடைத் தேர்தல்.

க.சுந்தர் எம்.எல்.ஏ.

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு–150, காரம்பாக்கம் இளைஞர் அணி சார்பில் நரேன் கணபதி ஏற்பாட்டில் மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளரும், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மாணவச் செல்வங்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சி.சுந்தர், எஸ்.ரமேஷ்ராஜ், மூன்லைட் டி.ரவி, க.கைலாசம், ஹேமலதா கணபதி, இ.ஜெயவேல், எல்.அருள், இரா.ரமேஷ், இரா.சீனிவாசன், ஆர்.எஸ்.தில்லைவாணன், ஆர்.லதாரவிச்சந்திரன், வி.ஜெகன்நாதன், எஸ்.பாலமுருகன், மா.பா.சித்ராலயம், ஜெ.ஏ.துரை, ஏ.ராகேஷ், செ.ரவி, லயன் டி.பாலாஜி பகுதி அமைப்பாளர் அ.கவுஸ்பாஷா, ஆர்.கோவிந்தசாமி, ஏ.ஆனந்தராஜ், வி.மணிகண்டன், எம்.சஞ்சய், குட்டி (எ) குருசாமி, கே.அன்பு, எம்.கோபி, எஸ்.லட்சுமணன், எல்.ஜனா, லோகநாதன், எஸ்.நித்யானந்தம், எம்.சுந்தர், ஜெயமுருகன், ஏ.பழனி, பிரேமா, ஜெயா, சரவணன், ஆர்.வினோத், ஆர்.பிரேம், பிரகாஷ், சுரேஷ், கே.முருகன், ஹரிபாபு, பி.ஹரி, ஆர்.ஆர்.ஹரி, பி.ரகு, தமிழழகன், ஏ.கோட்டீஸ்வரன், ஆர்.ஜனா, கந்தசாமி, பா.தனசேகர்,நரேஷ் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் வட்டக் கழக செயலாளரும் மண்டலகுழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் விழா நேதாஜி நகர் 4வது தெருவில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை 1000 நபர்களுக்கு கழக செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன்,மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் பொதுமக்களுக்கு வழங்கினர்.உடன் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன்,எஸ்.எல்.சுந்தர்,மாவட்ட துணை செயலாளர் நாகம்மை கருப்பையா,தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். எஸ்.கிருஷ்ணன், எஸ்.ராஜா, ஆகியோர் நன்றி கூறினர்.

விக்கிரவாண்டி தொகுதியில் - கழகத்தின்

வெற்றிக் கனியை முதல்வரிடம் ஒப்படைக்க தீவிரப் பிரச்சாரம்!

கழக விவசாய அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

விழுப்புரம், ஜூன் 21-

"விக்கிரவாண்டி தொகுதியில் கழகத்தின் வெள்ளிக்கனியை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் ஒப்படைக்க தீவிரமாகப் பாடுபடுவோம்" என்று கழக விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 20.6.2024 வியாழக்கிழமை மாலை 3.00 மணி அளவில் விழுப்புரத்தில் உள்ள "கலைஞர் அறிவாலயத்தில்" தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் கள்ளிப்பட்டி மணி, பா.செந்தமிழ்செல்வன், குறிஞ்சி என்.சிவகுமார் துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், மதுரை கணேசன், டி.எம்.அரியப்பன், பி.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவரும் - இந்திய அரசியலின் மூத்த தலைவராகவும் - கலை, இலக்கியம், பத்திரிக்கை என அனைத்து துறைகளையும் தன் வசப்படுத்தி வரலாற்று சாதனை படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை தி.மு.க. விவசாய அணியின் சார்பாக மாநிலம் முழுவதும் உள்ள விவசாய அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று, திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி ஏழையெளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மிகச் சிறப்பாக நடத்திட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இந்திய துணைக் கண்டமே வியந்து நோக்கும் வண்ணம் தமிழ் நாட்டில் உள்ள 40 தொகுதிகளிலும் "இந்தியா கூட்டணி" வேட்பாளர்கள் அதிகவாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றிபெற வியூகம் அமைத்ததோடு, தீவிர பிரச்சாரம் செய்து, அவ்வெற்றிக்கு பாடுபட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகளின் இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக பிரச்சாரம் செய்து, பாசிச பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை படுதோல்வி அடையச் செய்ததோடு மட்டுமல்லாமல், இந்தியா கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்திட, பாடுபட்ட தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் - விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகளின் இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

"நீட்" நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்திய போதிலிருந்தே, அது கிராமப்புற விவசாய மற்றும் விவசாயக் கூலி குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிரானது என்று அறிக்கைகள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கையெழுத்து இயக்கங்கள் ஆகியவற்றை தொடர்ந்து நடத்தி, அதனை எதிர்த்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் கூற்று மெய்ப்பிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற "நீட்" தேர்வு குளறுபடிகளுக்கு தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. அத்துடன், முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் "நீட்" நுழைவுத் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்திட வேண்டுமென ஒன்றிய பா.ஜ.க. அரசை கேட்டுக் கொள்கிறது.

வருகிற ஜூலை 10ஆம் தேதி அன்று நடைபெற விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில், தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு, வெற்றிக்கனியை கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைத்திடும் அளவிற்கு தீவிர பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமென தி.மு.க. விவசாய அணியின் நிர்வாகிகளையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் பேருந்து நிலையத்திலிருந்து பூந்தமல்லி வழியாக வண்டலூர் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரையிலான 297 புதிய பேருந்து வழித்தடனை மக்கள் பயன்பாட்டிற்காக திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், கே.திராவிட பக்தன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர் மன்ற துணைத் தலைவர் சி.சு. ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள்ப. சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், கூளூர் எம்.ராஜேந்திரன், டி.கிறிஸ்டி, மோ.ரமேஷ், வி.எஸ்.நேதாஜி, தி.ஆ.கமலக்கண்ணன், ராஜேஷ்வரி கைலாசம், டி.எம்.ரவி, இ.குப்பன், பி.கே.நாகராஜ், சரஸ்வதி சந்திரசேகர், டி.மோதிலால், டி.கே.பாபு, கு.பிரபாகரன், அயூப், விஜயகுமார், தாமஸ் (எ)ராஜ்குமார், ராயல் பாஸ்கரன், அ.பவளவண்ணன், ஜி.பாண்டியன், ஜெ.சேகர், கடம்பத்தூர் ராஜசேகர், ராஜ், பாலு, தொ.மு.ச.பாஸ்கர் உள்பட போக்குவரத்து துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முனுஆதி

ஜூன் 21 (2005)

தாம்பரம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

நகர்மன்றத் தலைவராக, தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தமிழக சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.